பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 11 15-05-1992 ( மே. 15 — மே. 29 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

## திருமறைச் சுடர்

யாழ் ஆயரின் மும்மடி விழா சிறப்புமலராக "திருமறைச் சுடர்" (Flames of Greatness) என்ற நூல் வெளியிடப்பட்டது. வெகு சிறந்த மலராக வெளியிடப் பட்டுள்ள இம்மலர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெவ்வேறு அக்கங்களைத் தாங்கி நிற்கின்றது.

### மரட்டினார் குருமட பாதுகாவலரைப்போல ஆயர் இறை சித்தத்தை ஏற்றார்

# யாழ். பேராலயத்தில் ஆயருக்கு மும்மடி விழா

**யாழ். ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் ஆயர் திருநிலைப் படுத்தலின் 25வது ஆண்டு நிறைவுற்ற மே 11ஆம் திகதி குருத்துவ பொன்விழாவும் பிறப்பின் பவளவிழாவும் இதுவரை கண்டிராத மக்கள் திரள் மத்தியில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.**

யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயரின் மும்மடிவிழா இம்மாதம் 11ஆம் திகதி மாலை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இது பற்றி வெவ்வேறு பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை வாசகர் நன்மை கருதி இங்கு பிரசுரிக்கிறோம்.

ஆயர் தமது உரையில் தாம் தமது குடும்பத்தில் 9ஆவது பிள்ளை என்றும், தன்னைத் தமது தாயார்தான் குருத்துவ வாழ்வுக்கு வித்திட்டு உறுதிப் படுத்தினார் என்றும் குறிப்பிட்டார்.

1978இல் தாம் கடும் நோய் வாய்ப்பட்டிருந்த வேளையில் தனது சிறிய குருமட பாதுகாவலர் காட்டிய வழியில் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தார் என்றும் "ஆண்டவரே நான் உமக்கு தொடர்ந்தும் ஊழியம் புரிவது உமக்கு சித்தமானால் என்னை முழுவதும் கையளிக்கிறேன்" எனக் கூறி தம்மை அர்ப்பணித்ததாக கூறினார்.

## தமிழர் நிலையை உலகிற்கு காட்டுவதில் பங்காற்றியவர்

"நீண்டகாலமாக தமிழ் மக்கள் கொடுமைகளையும், அழிவுகளையும சந்தித்து அவற்றுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இந்த நிலைமையும், தமிழ்மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் உலகுக்கு எடுத்துக்காட்டுவதில் யாழ். ஆயர் மிகப் பெரும் பங்கு வகித்துள்ளார். அதே பணியை அவர் மண்ணுக்காகத் தொடர்ந்து ஆற்றவேண்டும்" இப்படிக் கோரிக்கை விடுத்தார் புலிகளின் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி.

யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி-பொன்-பவள விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். பேராலயத்தில் நேற்றுமாலை நடந்த திருப்பலியை அடுத்து ஆயர் தியோகுப்பிள்ளை நாதஸ்வர இசைமுழங்க திறந்தவெளி யரங்குக்கு அழைத்துச்செல்லப் பட்டார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள் இறை வணக்க வரவேற்பு நடனத்துடன் ஆயரை வரவேற்றனர்.

யாழ். மறைவட்ட குரு முதல்வர் அருட்திரு எஸ். ஏ. மைக்கல்சாமி தலைமையில் முப்பெரு விழாக் கூட்டம் நடைபெற்றது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## யாழ். ஆயர் தமிழ் மக்களுக்கு சிறந்த தொண்டாற்றியவர்

— கொழும்பு பேராயர்

"யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை தமிழ் மக்களுக்கும் கத்தோலிக்க சமயத்துக்கும் சிறந்த தொண்டாற்றியவர். இலங்கை கத்தோலிக்க சமய ஆயர் உயர்குழுவின் நன்மதிப்பைப் பெற்றவர்"

இவ்வாறு இலங்கை கத்தோலிக்க ஆயர் அவைத்தலைவரும், கொழும்பு அதிமேற்றாணியருமான பேரருள் திரு. நிக்கிலாஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ கூறினார்.

யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளையின் வெள்ளி-பொன்-பவள விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய பேரரு திரு. நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ தமிழில் உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது,

"யாழ். ஆயர் தியோகுப்பிள்ளையின் இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் சகல மட்டங்களிலு

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)



பேராலய திறந்தவெளி அரங்கில் யாழ் ஆயர் உரையாற்றுகிறார்.

## மக்களுக்கு மன உறுதியூட்டிய பெருந்தகை யாழ் ஆயர்

— பேராசிரியர் துரைராசா

"அரசாங்கப் படைகள் மக்கள் குடியிருப்புக்கள்மீது குண்டு வீசித் தாக்கி மக்களின மன நிலையைப் பாதிப்படையச் செய்வதன் மூலம் அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற முயற்சித்த சமயம் அசையாத ஆத்ம பலத்துடனும் உறுதியுடனும் இந்த மண்ணிலேயே தங்கி நின்று யாழ். மக்களுக்கு மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் ஊட்டியவர் ஆயர் வண. தியோகுப்பிள்ளை." இவ்வாறு நேற்று யாழ். பேராலய மைதானத்தில் நடைபெற்ற ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்களின் வெள்ளி, பொன், பவள விழாவில் கலந்துகொண்டுஉரைநிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. தி. துரைராசா தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் ஆயரின் சேவை தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)



பேராலயத்தில் திருப்பலியின்போது மன்னார் ஆயர் மறையுரையாற்றுகிறார்.

## ஆயருக்கு முப்பெரும் விழா — பேராலயத்தில் ஜனத்திரள்

மேதகு யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் முப்பெரும் விழா மிகச் சிறப்பாக 11 ஆம் திகதி நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட ஜனசமுத்திரத்தின் மத்தியில் ஆண்டகையின் வெள்ளி, பொன், பவள விழா அன்று மாலை நான்கு மணிக்கு ஆரம்பமானது. ஆயர், ஆயர் இல்லத்திலிருந்து சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார். அங்கிருந்து பேராலய மணி ஒலிக்க குருப்பிரசாதிகள், ஆயர்கள் வரிசையாக முன்னே செல்ல, ஆயர் முடிசூடி கையில் செங்கோல் ஏந்தி பவனியாக பேராலயத்திற்கு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்க அழைத்துச் செல்லப்பட்டார்.

அடுத்து ஆலயமுன்றலில் வைத்து அருட் திரு எஸ். ஏ. மைக்கல் சாமியின் தலைமையுரையுடன் மேடை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

யாழ் பேராலய மைதானத்தின் அனைத்துப் பகுதிகளும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் பணியிலும் வீதி ஒழுங்குகளைக் கவனிப்பதிலும் தமிழீழக் காவல் துறையினரும் சாரணர் இயக்கத்தினரும் ஈடுபட்டிருந்தனர்.

யாழ் மறைவட்டப் பொது நிலையினர் கழகச் சார்பில் ஆசிரியர் சூசைநாயகமும், கத்தோலிக்க 'ஆயர் அவைத் தலைவர், மன்னார் மறைவட்டக் குரு முதல்வர், யாழ் மறைவட்டத்துறவிகள் சார்பில் அருட் செல்வி மேரி யுடொக்சி மேதகு ஆயர் கலாநிதி டீ. ஜே. அம்பலவாணர்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# புதிய தாபகர்கள்

வட பகுதியில் அமல மரித்தியாகிகள் கடந்த 145 வருடங்களாகப் பல்வேறு துறைகளில் பெரும்பணி புரிந்து வந்துள்ளார்கள். இவர்களின் சேவையின் பலன்கள் புறத்திலும் தெரியாமல் இல்லை. யாழ். மன்னார் என இரு மறைவட்டங்கள் உதித்தன. ஐந்து தமிழ் ஆயர்கள் இம்மண்ணில் அபிஷேகம் செய்யப்பட்டனர். நன்கு வளர்ச்சியடைந்த பல மறைவட்டக் குருக்கள், கோவில்கள், கல்லூரிகள், பாடசாலைகள், பங்குகள் தோறும் ஆயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் என்று அனைத்துமே போட்டி போட்டுக் கொண்டு அமதிகள் சேவைக்கு சாட்சியம் கூறுகின்றன. இவற்றை நினைந்து இறைவனுக்கு நன்றி கூறும் அதே வேளை மறைந்த அமலமரித்தியாகிகளுக்கும் நாம் சிரம்தாழ்த்தி பணிவன்புடன் நன்றி நவில்கின்றோம். மறைவட்டத்தை விட்டு விலகி நின்று தமக்கென ஒரு புதிய தனித்துவத்தைத் தேடும் கட்டம் இன்று தோன்றி விட்டது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக இப்பகுதி ஒரு கொடிய போரினால் பல முனைகளிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போரின் விளைவுகள். போரின் பின்னர் பிறந்து வெடிக்கக்கூடிய உளத்தாக்கங்கள் சில தலைமுறைகளுக்கு நமது சமூகத்தைப் பாதிக்கும் என்பது நமது கணிப்பு.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில்தான் வடபகுதி அமதிகள் தங்கள் 145 வருட வரலாற்றில் முதன் முறையாக ஒரு மாநாட்டை நடாத்துகிறார்கள். இச் செயலே ஒரு செய்தி சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு காலச் சூழலில் நின்று கொண்டுதான் அமதிகள் 90களை நோக்குகிறார்கள். வரலாற்றின் பின்னணியையும் இந்த இடைக்கால அங்கலாய்ப்பையும் வருங்காலத்தின் திட்டவட்டமில்லாத நிலைப்பாட்டையும் அதனால் வரும் பாதுகாப்பின்மையையும் இதனால் தோன்றும் ஒரு அங்கலாய்ப்பையும் உணர்ந்து ஏற்றுக்கொண்டு 90களை அமதிகள் நோக்குவார்களானால் அமதிகள் மாநாடு அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் மலரும்.

அமலமரித்தியாகிகள் புதியதாகச் சிந்திக்கவேண்டும், ஏன் புரட்சியாகவும் சிநதிக்கவேண்டும். இவர்கள் புதிய கனவுகள் காணவேண்டும். பணிகளுக்குப் புதிய திசைகளைத் தோற்றுவிக்க வேண்டும். இத்தனையையும் ஒருமாகாணமாக, ஒரு பெரிய குழுவாகவும் பார்க்க வேண்டும். கடினமான செயல், சவாலான அழைப்பு.

மறைவட்ட அமைப்புகளில் இருந்து விலகி நின்று ஒரு துறவறசபையென்ற தனித்துவத்தோடு பார்க்க வேண்டும். ஓர் அனைத்துலகத் துறவற சபை, உலகளாவிய நோக்கோடு வடமாகாணத்தைத் தேசியக் கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும். இச்சவால்களை அமலமரித்தியாகிகள் ஏற்பார்களா? அன்றேல், சில குறுகியகால நோக்குகளில், சில பணித்திட்டங்களில் தம்மை மறைத்துக் கொள்வார்களா? மறைந்து கொள்வார்களா?

இப்படிப்பட்ட தூரத்துப் பார்வைகள், தீர்க்கதரிசனக் கண்ணோட்டங்கள் வெறும் அறிவியல் நோக்கிலிருந்து பிறக்கக் கூடாது. வெறும் சிந்தனையில் இருந்து தோன்றக்கூடாது. மக்களின் உணர்வுகளை, எதிர்பார்ப்புகளை, கனவுகளை நாடிபிடித்துப் பார்த்து, தங்கள் உணர்வால் உணர்ந்து பார்க்கும் பொழுதுதான் காட்சிகள் தெரியும், கனவுகள் தெளியும். தன்னலமற்ற சுயபிடிப்புகளில் இருந்து விடுபட்ட ஓர் ஆழமான ஆன்மீகமே இவற்றிற்கு அடித்தளமாக அமையவேண்டும். அங்குதான் இன்றைய வட பகுதி அமல மரித்தியாகிகள் புதிய தாபகர்களாக (new founders) மலர்வார்கள்.

# யாழ். அமதிகளின் முதல் மாநாடு

(12-05-92 — 18-05-92) *சிறப்பிதழ்*

# ஏன் இந்த மாநாடு?

மக்கள் நல்வாழ்வுக்கெனத் தோற்றுவிக்கப்பட்ட எந்தவொரு மனித தாபனமும் தொடர்ந்தும் மக்களுக்குப் பயனுள்ளதாய், அர்த்தமுள்ள முறையில் இயங்க வேண்டுமானால், அது காலத்துக்குக் காலம் தன்னை, தன் செயற்பாடுகளை மீளாய்வு செய்து, மக்களின் மாறுபடும் தேவைகளுக்கேற்ப தன்னையும், தன் பணிகளையும் திட்டமிட்டுச் சீரமைப்பது இன்றியமையாதது. துறவற சபைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. யாழ் மாநிலத்தில் பணிபுரியும் அமல மரித்தியாகிகள் தம் வாழ்வையும், பணிகளையும் மீளாய்வு செய்து, நம் மக்களின் இன்றைய தேவைகளுக்கேற்ப அவற்றைத் திட்டமிட்டுச் சீரமைக்க எடுக்கும் முயற்சியே இந்த அ. ம. தி கள் மகாநாடு.

எப்பணியும் அமதிகளுக்குப் புறம்பானதல்ல. "தேவை எங்கோ அங்கே நம் சேவை" என்பதே அவர்கள் கொள்கை. ஆனால் எப்பணியை மேற்கொள்ளினும், அப்பணியில் ஏழை எளியவர், வறியவர், ஒடுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், குரலிழந்தோர், அகதிகள், அநாதைகள், கைவிடப்பட்டோருக்குச் சிறப்பிடம் உண்டு. இதுவே அவர்கள் தனிச்சிறப்பு. எனவே இம் மகாநாட்டின் விளைவாக யாழ் மாநில அமதிகள் புது உருப்பெற்று, புத்தூக்கம் கொண்டோராய், புதுப்பொலிவுடன் திகழ்வர் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பும் ஆகும்.

இன்று யாழ் மாநிலத்தில் அ. ம. தி களின் பணித்தளம் பெரும் மாற்றம் கண்டுள்ளது. மறைவட்டக்குருக்கள் இன்று தொகையில் பெருகி, ஆற்றலில் வளர்ந்து, மறைவட்டத் தாபனங்கள், பங்குகள் அனைத்தையும் பொறுப்பேற்று, சிறப்புடன் பணிசெய்து வருகின்றனர் எனவே அ.ம.தி களுக்கு மறைவட்டத் தேவைகள், பணிகள் அற்று வருகின்றன. அதே வேளையில் நீண்ட காலமாக எம் மாநிலத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரின் விளைவாக மக்களுக்குப் புதுப்புதுப் பிரச்சனைகளும், தேவைகளும் தோன்றியுள்ளன இப் புதிய சூழலில் அமதிகளின் வாழ்வும், பணிகளும் அர்த்தமுள்ளவையாக, பயனுள்ளவையாக அமைய வேண்டுமானால், இப் புதிய தேவைகளுக்கேற்ப புதிய உருப்பெற வேண்டும். இன்றைய மக்களின் அவசரத் தேவைகளை இனங்கண்டு, தரப்படுத்தி, தம் சபையின் அருங்கொடைக்களையை சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, தம் வாழ்வையும், பணியையும் சீரமைக்கவே அமதிகள் மகாநாடு கூடுகிறார்கள். இம் மாநாட்டில் அடுத்து வரும் ஆண்டுகளில் யாழ் மாநிலத்தில் அ. ம. தி களின் வாழ்க்கை, பணி, பற்றிய கொள்கை நிர்ணயிக்கப்பட்டு, தீர்மானங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இம் மாநாட்டின் மூலமாக அதிகம் நன்மை பெற இருப்பவர்கள் நம் மக்களே. எனவே அ.ம. திகள் மாநாடு இனிதே நடைபெற வாழ்த்துவோம். இவர்கள் பணி சிறக்க நல்லாசி கூறுவோம். இந்நாட்களில் நல்ல இறைவன் இவர்களோடிருந்து, தம் ஆவியின் ஒளியில் இவர்களை வழிநடத்தி, சிறந்த தீர்மானங்களை இவர்கள் மேற்கொள்ளவும், மேற்கொண்ட தீர்மானங்களை உறுதியுடன் செயற்படுத்தவும் இவர்களுக்குத் துணை புரிய இறைவனை இறைஞ்சுவோம்.

## வரலாற்றில் பதித்த மைல் கற்கள்

1847 — ஆயர் ஒருசியோ பெற்றக்கினியின் பரிந்துரையின் பேரில் மார்ஸ்செயில்ஸ் ஆயராக விருந்த நமது சபை ஸ்தாபகர் மசனெட் நாலு அமதிகளை இலங்கைத் திருநாடு அனுப்பினார்.

1848 — அமதிகள் யாழ். மண்ணில் கால் பதித்தார்கள் — நற்செய்தியை — குறிப்பாக பிற மதத்தினரிடையே போதிக்கத் தொடங்கினர்.

1857 — ஆயர் பெற்றக்கினி இறப்பு. ஆயராக ஸ்ரிபின் செமேரியா இலங்கையின் வட பாகத்தைப் பொறுப்பேற்றார்.

1859 — அயர்லாந்திலிருந்து உதவிச் சகோதரர்கள் பிறவுண், பைறன் என்போர் வருதல். ஆங்கிலக் கல்வி வளர்ச்சி பெறுகின்றது.

1861 — பொற்சான் தந்தையவர்களால் ஆண்கள் அனாதை மடம் ஆரம்பிக்கப்பட்டது.

1862 — திருக்குடும்பக் கன்னியர் மண்ணின் மங்கையர்களானார்கள்.

1864 — புனித சூசையப்பர் துறவிகள் சபை உருவாக்கம்.

1868 — ஆயர் கிறிஸ்தோப்பர் பொன்சான் பொறுப்பேற்றல்

1 76 — "பாதுகாவலன்"—பத்திரிகை பிறந்தது— அச்சகம் வளர்ந்தது.

1881 — ஆங்கில பாடசாலை, புனித பத்திரிசியார் கல்லூரியாகப் பரிணமித்தது. அருள்தந்தை சிமைத் முதல் அதிபரானார்.

1883 — ஆயர் அன்றூ மெலிசான் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியாகப் பொறுப்பு ஏற்றல். புனித மடுத்தீனார் குருமட மாடிக்கட்டடம் நிறுவப்பட்டது.

1893 — ஆயர் கென்றி யூலேன் பொறுப்பேற்றல்

1904 — சுவாமி ஞானப்பிரகாசர் பொறுப்பில் நல்லூர் பங்கு நிறுவப்பட்டது. பன்முக வளர்ச்சியின் காலம் உதயமாகியது.

1920 — அன்றூ புறோ ஆயர் பதவியேற்று 3 ஆண்டுகள் பணிபுரிதல்.

1924 — ஆயர் அல்ரெட் கியோமர் பொறுப்பேற்றல்.

1950 — ஆயர் யெறோம் எமிலியானுஸ்பிள்ளை — (நம் மண்ணின் முதல் மைந்தன்) யாழ். திருச்சபையைப் பொறுப்பேற்றார். தளத் திருச்சபையின் வளர்ச்சி விரிவடைகின்றது.

1961 — "அமல உற்பவம்" — மறைபோதகர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

1970 — புனித சூசையப்பர் அ. ம. தி. சிறிய குருமடம் கொழும்புத்துறையில் உதயமாகியது.

1972 — ஆயர் வ. தியோகுப்பிள்ளை யாழ் திருச்சபையினைப் பொறுப்பேற்றார்.

1982 — 'தொடர்பகம்' — அமதிகளின் பணிக்களஞ்சியமாக நிறுவப்பட்டது. அருள்திரு. வேதநாயகம் அவர்களின் சிந்தனையில் பிறந்த கலைக்கூடமே இது.

1984 — மார்கழித் திங்கள் 8ஆம் நாள் அமதிகளின் யாழ். பேராண்மை தாபிக்கப்பட்டது.

1985 — பங்குனித்திங்கள் 11ஆம நாள் 'வசந்தகம்' — ஆரம்ப நவசந்நியாசப் பயிற்சியகம் நிறுவப்பட்டது.

1989 — சபையின் சிரேஷ்ட முதல்வர் அதிவண. மார்சல்லோ சகோ. யாழ் மண்ணுக்கு வருகை தந்தார்.

1989 — ஆவணித் திங்கள் 23ஆம் நாள்—யாழ் பேராண்மை (Jaffna Delegation) சிரேஷ்ட முதல்வரால் துணை மாகாணமாக (Vice Province) நிறுவப்பட்டது

1992 — யாழ். அமதிகளின் முதல் மாநாடு —தொடர்பகம் வைகாசித் திங்கள் 12—18.

ம. போல் நட்சத்திரம் அ. ம. தி.

**வீட்டுக்கொரு பாதுகாவலன் · உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்**

# அதிபரின் ஆசீர்



அமல மரித்தியாகிகள், ஆன்மீக வாஞ்சையால் தூண்டப்பட்டு எமது மண்ணில் கால் வைத்து நூற்று ஐம்பதுஆண்டுகள் நெருங்கிவிட்டன. 'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க'' என்ற விருதுவாக்குக்கு நம் நாடு இலக்காய் இருந்ததை அறிந்த ஸ்தாபகர் யூஜின் டிமசனெட், இருபத்தொரு வயது நிரம்பிய தம் சபையின் மைந்தர்களை துதுரைக்க அனுப்பிவைத்தார், தொடர்ந்து பலநாடுகளிலும் உள்ள அமல மரித்தியாகிகளை நம் நாடுகவர்ந்தது. நமது சொந்த மண்ணிலும் பல தியாகிகள் உதித்தனர்.

ஒரே தந்தையின் பிள்ளைகள் என்ற உண்மைக்காக அவர்கள் ஒன்றுபட்டு ஆற்றிய செயல்களினால், இரண்டு ஆயிரம் ஆண்டுகளாயினும் இன்றும் இங்கு அன்னை திருச்சபை இளமை குன்றாமல் மிளிர்கின்றாள் என்றால் இப்பெருமையும், மகிழ்ச்சியும் அவர்களைச் சார்ந்தது.

இன்று தலைகாட்டுகின்ற தீய சக்திகள் வேறு ரூபமாக அன்றும் செயற்பட்டன. அத்தியாகிகளின் வீரச் செயல்களுக்கு சிலை எழுப்பிவிட்டு, அவர்களுடைய லட்சியங்களை நாம் குழிதோண்டிப் புதைக்கலாகாது நமது பணி இன்றைய சூழ்நிலைக்கு சவாலாக மையவேண்டும் ஒரு மனப்பட்ட, துணிவுள்ள, முழுமையான முயற்சிகள்தான் வெற்றியை ஈட்டும் என்பதை உள்ளத்தில் கொண்டு வாழ்வோம்! செயல்படுவோம்!!

பி. பி. பிலிப்

# எமது ஆயரின் ஆசீர்

முதலாவது மாநாட்டை யாழ் வடமாநில அமதிகள் தமது தொடர்பகத்தில் வைகாசித் திங்கள் 12 – 18 நாள்வரை நடாத்தவிருப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்! தங்கள் சபை நிறுவனரின் அருங்கொடைகளுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கவும், தற்காலச் சூழல்களுக்கேற்ப தனது பணிகளைத் திட்டமிடவும் கூடுகின்றார்கள்.

தங்களுக்கும், ஏனைய சபை உறுப்பினர்களுக்கும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அமதிகள் யாழ் மண்ணில் தாம் ஆரம்பித்த பெரும்பணியை இன்றும் புதிய உத்வேகத்துடன் தொடர்ந்தாற்ற ஆசிக்கின்றேன். இந்த மாநாட்டின் வெற்றிக்காக நான் இறைவனை வேண்டி நிற்கின்றேன்.



# மாநாட்டின் ஆய்வுக்கென

''அமதிகள் மகாநாடு'' கூடுவது தீர்மானிக்கப்பட்டதையடுத்து, நடைபெற்ற ஆயத்தக் கருத்தரங்கில், இம்மகாநாட்டின் பரிசீலனைக்கு எடுக்கப்படவேண்டிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது. இறுதியில் முதன் முன்னுரிமைகளாகக் கணிக்கப்பட்ட நான்கு துறைகள் ஏகமனதாகத் தெரியப்பட்டன. அவை முறையே; 1) தொடர் உருவாக்கம். 2) சிறப்புப் பணிகள் 3) மறைபோதகப்பணி 4) துறவறக் குழுவாழ்வு என்பனவாகும்.

**1) தொடர் உருவாக்கம்:**

அமதிகளின் உருவாக்கம் பெரிய குருமடத்துடனோ, அல்லது குருத்துவ திருநிலைப்படுத்தலுடனோ முற்றுப்பெறுகின்றதொன்றல்ல. அது நம் வாழ்நாள் முழுவதும் நடக்கும் ஒரு தொடர் வளர்ச்சி. அது ஒரு முழு மனித வளர்ச்சியாக, அதாவது அறிவு, ஆற்றல், ஆன்மீகம், ஆளுமை, உணர்வுகள், மனச்சான்று, சுதந்திரம், அனைத்தும் ஒருங்கிணைந்த முழுவளர்ச்சியாக அமைய வேண்டும். இப்படிப்பட்ட தொடர்உருவாக்கம் துறவறத்தவர்களுக்கு மிக அவசியமெனத் திருச்சபை வலியுறுத்துகின்றது. ஆனால் யாழ் அ.ம. திகளைப் பொறுத்தமட்டில் இது மறக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட ஒரு விடயமாகவே இருந்து வருகிறது. இதன் விளைவாக அவர்களது வாழ்வும், பணிகளும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இந்நிலை மாறவேண்டும். இவ்விடயம் அலசி ஆராயப்பட்டுத், திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

**2) சிறப்புப் பணிகள்:**

எப்பணியும் அ.ம. திகளுக்குப் புறம்பானதல்ல. தேவை எங்கோ, அங்கே அவர்கள் சேவை. இன்றைய போர்க்காலச் சூழலினால் பாதிக்கப்பட்டு வரும் மக்களின் வாழ்க்கைத் தேவைகள் பெருமளவு மாற்றம் கண்டுள்ளன. இத்தேவைகள் இனங்காணப்பட்டு, தரம்பிரிக்கப்பட்டு, அவற்றிக்கேற்ப அ.ம. திகளின் பணிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். பணிகளைத் தீர்மானிக்கும் பொழுது வறியவர், ஏழை எளியவர், ஒடுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், யாவராலும் கைநெகிழப்பட்டோர், அகதிகள், அநாதைகளுக்கு சிறப்பிடம் வழங்கும் அமதிகளின் 'தனிஇயல்பு' கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். தேவைக்கேற்ற பணிகள் மக்களுக்கு நல்ல பயனை அளிப்பதோடு நின்றுவிடாது, அமதிகளின் வாழ்வையும் அர்த்தமுள்ளதாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**3) மறைபோதகப் பணி:**

மறைபோதகமே அமதிகளின் தலை சிறந்த பணி ''நற்செய்தி நவில என்னை அனுப்பினார்'' என்பதே அவர்கள் விருதுவாக்கு. இன்று நம் மாநிலத்தில் நற்செய்திப்பணி பலபுதிய சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. அரசியல் நெருக்கடிகள், இனத்துவேஷங்கள், வன்செயல்கள், பயணக்கஷ்டங்கள், மதிப்பீடுகளில் குழப்பநிலை, பிரிவினைச் சபைகளின் ஊடுருவல்கள் என்பன அவற்றுட்சில. மேலும் பரவிவரும் உலகாயுதக் கொள்கைகள், கலாசார மாற்றங்கள், நவீன தொடர் சாதனங்களின் பிரச்சாரங்கள் மக்களைத் திசைதிருப்பி இறைப்பற்றை அழித்துவருகின்றன. நம் மக்களின் சமய, சமூக, கலாச்சார சூழ்நிலைகளுக்கேற்ப நம் போதனா முறையும் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இன்றைய நவீன தொடர்பு சாதனங்கள், மற்றும் சமூக தொடர்பு முறைகளைக் கையாண்டு, மக்களைக் கவரும் வண்ணம் எம் மறைபோதகம் அமைய வேண்டும். காலத்திற்கேற்ப நம் போதனா முறைகளை மாற்றியமைக்க இம் மகாநாடு வழி சமைக்கும்.

**4) துறவறக் குழு வாழ்வு:**

அமதிகளின் வாழ்வும் பணியும் வளர்ச்சியும் அவர்களுடைய துறவறக் குழுக்களின் சூழலிலேயே இடம்பெற வேண்டுமென்பது அவர்களின் ஒழுங்கு அப்போஸ்தலிக்க சமூகத்தையொத்த ஒரு குழுவாக வாழ்ந்து செயற்படுவதே அவர்களின் அழைப்பு. பல்லாண்டு காலமாக பங்கு ரீதியில் பிரிந்து வாழ்ந்து தனிமையில் பணிபுரிந்த காரணத்தால் யாழ் அமதிகளிடையே இது தறுகிக், குன்றிக் குறைந்து காணப்படுகின்றது. நம் சமூகத்தில்காணப்படும் இன, மொழி, சாதி, குல வேற்றுமைகளும் தமக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில் அப்போஸ்தலிக்க சமுதாயத்தின் சிறப்புப் பண்புகள் எனத் திகழும் அன்புறவு, ஒற்றுமை, சமத்துவம், கூட்டுப் பொறுப்பு, பரஸ்பரநம்பிக்கை, பகிர்தல், செபம், சாட்சியம் போன்றவற்றை எம் துறவறக் குழுக்களில் எப்படிக் கட்டிக் காத்து வளர்க்கலாம்? இம் முயற்சியில் நாம் சந்திக்கும் இடையூறுகள் எவை? குழு வாழ்வை இலகுவாக்கும், கட்டியெழுப்பும் துணைஉத்திகள் எவை? இவற்றை நன்கு பரிசீலனை செய்து, ஆராய்ந்து செயற்படுத்துவது அமதிகள் வாழ்வை மகிழ்வுள்ளதாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# அமதிகளின் தூரத்துப் பார்வை

எப்பணியும் அமதிகளுக்குப் புறம்பானதல்ல. மக்கள் தேவை எங்கோ அங்கே நம் சேவை என்பது தான் அவர்கள் கொள்கை. எப்பணி செய்திடினும் அமதிகளின் அப்பணியில் கவனிப்பார் யாருமின்றி கைவிடப்பட்ட வறியோருக்குச் சிறப்பிடம் உண்டு. இதுவே, அவர்களின் தனிப்பண்பு.

மக்களின் இன்றைய வாழ்வை நாடி பிடித்துப் பார்த்து கடந்த கால நிகழ்வுகளின் வரலாற்றுப் பின்னணியில் தற்கால நிகழ்வுகளை ஆராய்ந்து, மக்களின், இன்றைய தேவைகளையும், எதிர் காலத் தேவைகளையும் நன்கறிந்து அதற்கேற்ப அவர்கள் பணிகளைத் தழுவி அமைப்பதே இம்மகாநாட்டின் இலக்கு என்றால் மிகையாகாது.

இன்று எம்மக்கள் போர்க் காலச் சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர் பல்லாண்டு காலமாய்த் தொடர்ந்து நடைபெற்றுவரும் இப்போர் நம் மக்களை, அவர்களின் சிந்தனைகள், மதிப்பீடுகள் ஒழுக்கத்தை ஏன் அவர்களது வாழ்க்கையையே பெருமளவு பாதித்துள்ளது. இந்த பத்தாண்டுப் போரின் விளைவுகளால் நம்மக்களின் ஓரிரு தலைமுறைகள் வெகுவாகப் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உளநெருக்கீடுகள் எத்தகையன? மிகவும் ஆழமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் முழு மனிதர்களாக வாழ, வளரத் தடைகள் என்ன? இத்தடைகளை எப்படி நீக்குவது? இம்மக்களுக்கு உளவியல் வழிநின்று உளநலன் அளிக்க யார் முன்வருவர்?

இனக் கலவரங்கள், போராட்டங்கள், பிரச்சினைகளில் விளைவாக ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும், சிறையிலும் சித்திரவதைக் கூடங்களிலும் பற்பல வேதனைகளையநுபவித்து, விடுதலை பெற்றும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களாய் விரக்தியின் விளிம்பில் வாடுகின்றார்களே. இவர்களுக்குப் புனர் வாழ்வளித்து சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெறவழிசமைத்துக் கொடுப்போர் யார்?

இன்று திடீரென தோன்றியிருக்கும் ஆயிரக்கணக்கான அநாதைகளை அரவணைத்து, அன்பு செய்து பெற்றோரில்லாத பெருங்குறையை ஓரளவாவது நிறைவு செய்பவர் யார்? தொழில் நோக்கில் பயிற்சித்தளங்கள் அமைப்பது, ஒருங்கிணைந்த உருவாக்கம் பெற்ற இளைஞர்களாக சமுதாயத்தின் நற்பிரஜைகளாக வாழ இவர்களுக்கு வழி காட்டுபவர்கள் இல்லையா?

அசம்பாவிதங்களின் விளைவாக உடைமைகளை இழந்து, உடன் பிறப்புக்களை இழந்து, உழைப்பவர்களையும் இழந்து, உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி இருக்கஇடமின்றி அகதிகளாக அலைந்து திரியும் மக்களுக்கு ஆறுதலளிப்பவர் யார்? வட கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே, இலங்கையில் ஏனைய பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் சிதறுண்டு போய்க் குடியேறி, ஆன்மீக வளர்ச்சி குன்றி, மேய்ப்பனில்லாத மந்தை போல் வாடும் நம் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கும் ஆன்மீகப் பணிபுரிய எவரும் முன்வர மாட்டார்களா?

உகந்த சமூகத் தொடர்புச் சாதனங்களைப் உருவாக்கிப் பயன்படுத்தி வாழ்விழந்து கிடக்கும் தமிழ் மக்கள் சமுதாயத்தை விழித்தெழச் செய்து சமூக உணர்வு கொண்ட புதியதொரு சமுதாயம் உருவாக முன்னின்று உழைக்க எவருமில்லையா?



(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

பாதுகாவலன்
PATHUKAVALAN

# யாழ் ஆயரின் மும்மடி விழா

யாழ். ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் மும்மடி விழா 11ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

கொழும்பு அதிமேற்றிராணியார், அதி வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, காலி ஆயர் அதி வண. டொன் சில்வெஸ்ரர், குருநாகல் ஆயர் அதி வண. றேமன் பீரிஸ், திருமலை மட்டுநகர் ஆயர் அதி. வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மன்னார் ஆயர் அதி வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோருடனும் யாழ். ஆயர் தமிழ் பண்பாட்டின்படி மங்கல இசையுடன் பேராலயத்துக்கு ஏனைய குருமாருடன் அழைத்து வரப்பட்டார்.

அதன்பின்னர் யாழ் ஆயரும் ஏனைய ஆயரும் குருமாரும் சேர்ந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர்.

நன்றி : முரசொலி

# ஆயர் இல்லமும் அழிவுகளின் சாட்சி

"நீண்ட காலமாக இம்மண்ணில் நாம் மிகப் பெரிய அழிவுகளை சந்திக்கிறோம். இந்திய படைகளோடும் சிறீலங்கா படைகளோடும் போராட்டம் நடத்துகிறோம். தமிழ் மக்களின் உரிமைகளை உணர்வுகளை வெளியாருக்கு எடுத்துக் காட்டி மிகப்பெரும் பங்காற்றியவர் யாழ், ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை".

இவ்வாறு யாழ். பேராலய முன்றலில் நடைபெற்ற யாழ். ஆயரின் மும்மடி விழா வைபவத்தில் சிறப்புரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் திரு யோகரத்தினம் யோகி தெரிவித்தார்.

இந்த அழிவுக்கு இப்பேராலயமும் யாழ் ஆயர் இல்லமும் சாட்சிகளாக உள்ளன. ஆபத்துக்களை எதிர் நோக்கி தமிழர்களுக்கு உறுதுணையாக நின்றவர்

இராணுவ அனர்த்தங்களைக் கண்டு வெளியேறாது ஆயர் இல்லத்திலேயே தங்கியிருந்தவர் ஆயர் அவர்கள்.

சுவாமி ஞானப்பிரகாசர் தனிநாயகம் அடிகளார் போன்று தமிழுக்கு தொண்டாற்றி சிறந்த தமிழ் நூல்களை இந்த மண்சிறப்புற செய்த ஆயர் அவர்கள் நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகிறேன் என்றார்.

கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தமிழில் உரையாற்றினார் யாழ், அரச அதிபர் தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றினார்.

நன்றி : முரசொலி

## ஆயருக்கு...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள், யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு. யோகரெத்தினம் யோகி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதனை அடுத்து பிரதம ஆசிரியர் அருட்திரு. பிரான்சீஸ் யோசவ் அவர்களால் விழாச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது இறுதியாக யாழ் மறைவடடக் குருக்கள் குழுத் தலைவர் அருட்திரு. அன்ரன் இராஜநாயகம் அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து திருமறைக் கலா மன்றத்தினரின் கலை நிகழ்ச்சியுடன் முப்பெரும் விழா இனிதே நிறைவுற்றது.

நன்றி : ஈழநாதம்

## அமதிகளின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தின் கோலங்களுக்கேற்ப நற்செய்திப் போதனா முறைகளை மாற்றியமைத்து கவர்ச்சியான முறையில் மக்களின் இதயங்களைத் தொடும் வகையில் கிறிஸ்துவை இன்னும் அறியாத மக்களுக்கு அவர் பற்றி எடுத்துக் கூற யார் முன்வருவர்?
நம் மாநிலத்தில் பணிபுரியும் சகல துறவிகளையும் ஒன்றிணைந்து அவர்களின் முழுமையான தொடர் உருவாக்கத்தில் பங்கெடுத்து துறவற வாழ்வு சிறப்புற்று வளர்வதற்குத் தலைமை தாங்கி உழைக்க யார் முன்வருவர்?

இவ்வாறெல்லாம் அமதிகளின் தூரத்துப் பார்வை சிந்தனைகள் செல்லுகின்றன. இவ்வினாக்களையெல்லாம் அலசி ஆராய்ந்து சிந்தித்து அவற்றைத் தம் பணிகளாக மாற்ற அமதிகள் விரும்புகிறார்கள். இம் மகாநாடு இதற்குப் பேருதவியாக அமையும் என்பதே அவர்கள் எதிர்பார்ப்பு.

## தமிழர் நிலையை ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கத்தோலிக்க ஆயர் அவைத் தலைவர் பேரருள் பெருந்தகை நீக்கிலஸ் மார்க்கஸ் பேசுகையில்—

இன்று நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து மக்களும் ஆயர்களும் இங்கு கூடியிருப்பது ஆயர் மன்றத்தின் மூத்த தலைவரின் விழாவில் பங்குபற்றவேயாகும் — என்றார்.

இவ்விழாவில் நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்- அருட்திரு. ஏ சேவியர் குரூஸ் அருட்செல்வி மேரி யுடெக்ஸி, தென்னிந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீன ஆயர் கலாநிதி டீ. யே. அம்பலவாணர், யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்,

விழாசிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

நன்றி உதயன்

## மக்களுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவை என்று கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. யோகி அவர்கள் உரையாற்றும்போது நீண்ட காலமாக தமிழ் மக்கள் சந்தித்து வரும் அழிவுகளையும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் உலக அரங்கிற்கு எடுத்துக் காட்டுவதில் யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் பெரும் பங்கு வகித்தவர்.

இந்திய சிறிலங்கா இராணுவத்தினரது தாக்குதல்களால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அழிவுகளையும், கொடுமையும் உலக அரங்கில் அம்பலப் படுத்தியதுடன் இவ்வாறான கொடூரத்தனத்திற்கு மத்தியிலும் சொந்த மண்ணில் உறுதியுடன் நின்று இங்கு வாழும் மக்களுக்கு நம்பிக்கையூட்டியிருக்கிறார் என்றும் கூறினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு கா மாணிக்கவாசகர் இவ் விழாவில் கலந்து கொண்டு பேசும்போது யாழ் மக்கள் பாதுகாப்பின்மையால் அல்லலுற்றசமயம் ஆத்மபலத்துடன் தனித்து நின்று யாழ். மக்களுக்கு வழிகாட்டியவர் என்றார்.

இறுதியில் விழாநாயகர் மேதகு யாழ். ஆயர் வ தியோகுப்பிள்ளை அவர்கள் நன்றி கூறி உரை நிகழ்த்தினார்

நன்றி: ஈழநாதம்

## மண்ணையும் மக்களையும் நேசித்தவர்

— யோகி

'மண்ணையும், மக்களையும் கூடுதலாக நேசித்தார், யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை

இந்திய அரசும், இலங்கை அரசும் தமிழ மக்கள் மீது அழிவுகளை ஏற்படுத்திய காலங்களில் இந்த மண்ணை விட்டு ஓடாது. மனஉறுதியுடன் இருந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்றிய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு தமிழ்இனம் என்றும் கடமைப்பட்டுள்ளது."

இவ்வாறு யாழ் ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பெரும் வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரத்னம் யோகி கூறினார்.

இவ்வைபவத்தில் வி தலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரனி பாலசிங்கம், காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உட்பட விடுத்லைப்புலிகள் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நன்றி : ஈழநாடு

## சமூகப்பணி மறைப்பணி - இந்திய ஆயர்

கலவரம் நிறைந்த இந்திய மாநிலமான பீகாரில் சமூகப் பணிசெய்யும் கிறிஸ்தவப் பணியாளர்களுக்கு நடந்த ஆய்வரங்கொன்றில் உரையாற்றிய பகல்பூர் ஆயர் ஜோர்ஜ் சவுப்பின் சமூகப்பணியானது வார்த்தைகளின்றி நற்செய்தியைப் போதிப்பதாகும் என்று கூறினார்.

குருக்கள் கன்னியர் உட்பட 23 சமூகப் பணியாளர்கள் இந்த ஆய்வரங்கில் கலந்து கொண்டனர். இவர்கள் பெரும்பாலும் பூர்வ குடிகளால் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பணிசெய்பவர்கள்.

எளிமையான இந்திய உடையை விரும்பும் ஆயர் சவுப்பின் பல ஆண்டுகளாக இம்மக்களிடையே பணிபுரிந்தவர்.

## யாழ் ஆயர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்து ஆயர்களும், குருமாரும், அருட் சகோதரிகளும் இங்கு வந்துள்ளது; அவரின் தன்நலமற்ற சேவையை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் உயர் குழுவில் யாழ் ஆயர் மதிப்புடையவராகத் திகழ்ந்தவர் எமது உயர் பீடக்குழுக் கூட்டங்களில் சட்டப் பிரச்சனைகள் எழும்போது யாழ் ஆயரே அப்பிரச்சனைகளை மிக இலகுவாகத் தீர்த்துவைப்பர். அந்த அளவுக்கு அவர் ஒரு சட்டவல்லுநராகவும் திகழ்கின்றார் என்றார்.

யாழ் மறைவட்ட குரு முதல்வர் வண். எஸ் ஏ மைக்கல்சாமி தலைமையில் நடைபெற்ற இவ் வரவேற்பு வைபவத்தில் தென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி டீ. ஜே அம்பலவாணர், நல்லூர்ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ் அரசாங்க அதிபர் திரு. கா மணிக்கவாசகர், யாழ், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா உட்பட மற்றைய மறைவட்ட பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள்.

மேற்படி வைபவத்தை யொட்டி மும்மடி விழா சிறப்பு மலரை வண. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் வெளியிட்டு வைத்தார். விழாமுடிவில் வண. அன்ரன் இராஜநாயகர் அனைவருக்கும் நன்றி கூறினர்.

கலை நிகழ்ச்சிகளுடன் முடிவடைந்த இவ் வைபவத்தில் ஆயிரக்கணக்கில் பொது மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

நன்றி : ஈழநாடு



### 31-ம் நாள் நல்மரண அஞ்சலி

யேசுதாசன் அமிர்தராஜா யோண்

தோற்றம்: 1939 7-21 மறைவு: 1992-4-10

இறை இரக்கத்தின் யேசுவே உம் ஊழியக்காரனாக என்னை அனுப்பினீர். நீர் எனக்கிட்ட சட்டளைகளை சரிவரப் புரிந்தேன். உம் இரக்கமும் அன்பும் என்னை வழி நடத்திற்று. நீர் என்னை அழைத்தீர் — யேசுவே உம் திருவடி வந்து சேர்ந்தேன்.

இரக்கம் நிறைந்த யேசுவே உம்மண்டை அழைத்த யேசுதாசனை உமது நித்திய பேரின்ப வீட்டில் ஏற்றருள வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.
சூராவத்தை, சுன்னாகம். A/13/92

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**